குடாரம்.

திருவள்ளுவர் குறளையும் பரிமேலழக ருரையையும்
பற்றிச் சிலர் மயங்கிக் கூறியவழூஉக்
களை குடாரம்.

இது

தலைத்தமிழ்ச்சங்க வியற்றமிழாசிரியராகிய

வி. இராமாநுச கவிராயரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

விலை அணா 1.

குடாரம்.

திருவள்ளுவர் குறளையும் பரிமேலழக ருரையையும்பற்றிச்
சிலர் மயங்கிக் கூறிய வழூஉக் களை குடாரம்.

இதன் பொருள்: சென்னைமாநகர்வயின் இலக்கணக் கவிஞரிற் சிலர் மருண்டு சொல்லிய குற்றங்களாகிய காடுகளைக் களை கோடாலி என்பது. இஃதேகதேச வுருவக வணியாய நூற்குப் பெயராயிற்று.

இது

தலைத்தமிழ்ச்சங்க வியற்றமிழாசிரியராகிய

வி. இராமாநுச கவிராயரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

விலை அணா 1.

நடராசர்.

ஒருநாற் றாமரைத் தேருதய மாகத் தாங்கட
லிருசார் ரளைபரி லேழ்பரி படாகத்
பல்வலந் திரிதரு மண்டல வரைபயின்
முத்தமிழ் விளைநில முரணைவட நாவி
னத்தி முகனருக்க னாமமொருவு கலைவிய
பொருளொரு வடிவெடுத் ததுகொலோ புவனா
றெருளொரு வடிவெடுத் ததுகொலோ மேதவ
னருளொரு வடிவெடுத் ததுகொலோ வாவல
னைவரு பார சிலைபயி லவையொரு முன்றின
பவமே யெனவொரு வடிவெடுத் ததனைய
சோமசுந் தரனெனுந் தொன்னூற் றுரவ
னொருவன திருசரண் றனையிடத் திறைஞ்சி
நாறுமொரு விலக்கிய மைந்திய லாறுதோப்
பெதழுகட லொருமையா லிருமையி னுட்கொளீஇ
முப்பமைமா னொவ்வயி னெமொழி யைய
மறுத்தேத் வழக்கடிப் படுத்தேர்காக் கொருவனை
விருக்கான முறைகா லியனறனா கேட்பினூஉ நெ
சலியா துரைத்தனென் தலைத்தலைத் தூரிஇ
யித்தலை வாணரென் றிரைப்பெயர் பெற்றோ
ரெவரவர் வழிப்பட் டெய்முறைக் கற்றோர்
திசைதிசை நதுசெவி செவிப்பட் டயர்வுறஉச்
சாற்றலவி டபமொரு தலைமைப புலமைகொண்
டேறிய தெரும் பொருட் டிதிற்பிறி தழுக்கா
றுண்டெனின் முயற்சிகா டினமென லன்றமன்

றிப்பொருந் தூதுசெய் தெதிர்நிற்க கில்லாத்
தாபியல பெயருடைத் தண்டமிழ்ப் புலவிர்
றிபிர்தர
பரிமேலழகு பாஉ பன்பமைம யந்தனார்
பரிமேலழகர்செய் பழவுரை பதிப்புரை
யாதக் கண்டனி ரந்நிமெய்ந நடுநிலைவிர்
றுய்யமலைந் தருமெரி கொழுந்துவிட் டெரிதர
வார்புயிர் றும்புடன் வந்தனர் தமபொரீஉடம
பரிபிரு திக்கலைப் பதிபுறை வானாந்தம்
மனைதொறாஉந திரிந்தனிர் வைகல்பற் பலசெலப்
பின்னரும் காலீசு போர்ட்டி னுரைகட்டும்
பன்னுமிக் திறவுணர் பத்திரம் விடுத்தனி
ரிடநதொறு மிடந்தொறாஉ மென்னில்லைக யெழுதது
முடங்கல் போககினிர் முயன்றும் பயன்கொளா
தென்னே சென்றனி ரிருந்தநும் மூர்வயி
னிரந்துரை யெழுத்தி னியமறி புலமை
வரைந்துள சேலைகாண் பாண்பவன் கொல்லோ
களைதுவர் சென்னெறி கடிந்து நீயிர்நாம்
வளருவர் சொன்னெறி யாண்டநல் லையுபைக
கல்லா வொருவன் றனைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படூஉமெனல் விளங்கிப
புகழ்ப்புலப் படுத்துதும் புரிந்துட
னிகழ்ப்புலப் படுத்தா திங்ஙனம் வம்மினே.

இது நெடுமொழி.

உரைப்பாயிரத்துள், "வாழ்த்துக் கூறலெனவும், வழக்குத் தண்டமெனவும் வல்லொற்று மிக்குவருதல் கூடாது" என்றுக் கண்டனம்.

க. இது வன்றொடர்மொழிக் குற்றுகரச் சொன்னின்று வல்லெழுத்து முதன்மொழியொடு புணர்ந்ததாகலி னிதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார், "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே" என வல்வழிக்கும், "வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும், வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே" என வேற்றுமைக்குங் கூறினர். இஃதுணர்ந்த பவணந்தி முதலியோரும் "வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி" எனவும், "இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின், மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை" எனவுங் கூறியவற்றுள், வன்றொடர்க் கிருவழியும் வல்லொற்று மிகுமெனல் காண்க.

உதாரணம்:—வழக்குத் தண்டம், சுக்குத் திப்பிலி அரைப்புச் சீக்காய், குணக்குக் குடக்கு, பாக்குப் புகையிலை, கொக்குக் கடிது, குரக்குக்கடிது, பாக்குக்கடிது எனவும், வழக்குத் தீர்ப்பு, வாழ்த்துக் கூறினர், சுக்குக் கொடுத்தான், அரைப்புத் தந்தான், கிழக்குக்கொல்லை, பாக்குக் கடை, கொக்குக் கால், குரக்குக் கால் எனவும் வரும். இங்ஙனம் வல்லொற்று மிகாவேல், கீரை கறி, வாழை பழம் என்பன போலப் புணர்ச்சியின்றி விட்டிசைபோன்று நகுதற் பாலன வாமெனக் காண்க.

உரைப்பாயிரத்துள், "பதினெட்டுப் பதத்ததெனல் வேண்டும், பதினெட்டுப் பதார்த்தத்ததென்பது கூடாது" என்றுக் கண்டனம்.

உ. பதமே, மொழி வழியிடங் குறிமுதலன கொளினு உம், பொருள பெறல் வேண்டுமாற் புகல் பதார்த்தத்தது,

வழக்கெனவினைமுதன் மாட்டுதன் மரபு எனக் காண்க. என்னெனின், வழக்கானது பதினெட்டுப் பதத்ததெனின், அதற்குப் பதினெட்டுச் சொல்லையுடையது: ப - வழி - து, ப-இட-து, ப-கு-து எனப் பொருள்படும். அங்ஙனம் படினும் பதினெட்டுச் சொற்பொருளையுடையது: ப-வ-பொ-து, ப - இட - பொ - து, ப - கு - பொ - து எனப் பொருள் பொய்த்துரைத் தன்றி நிரம்பாமையா னென்க. பதமென்ப தீண்டுத் தொடர்பு தோன்ற நின்றது. இவற்றுட் கடன் கோட லென்பதோர் பதமெனவும் அதனுட் பொருளமைந்து கிடத்தலாற் பதார்த்தமெனவுங் காண்க. பதார்த்தமென்பது வடநூன் முடிபாய்த் தமிழினுளனே பண்ட பதார்த்தம், கறிபதார்த்தம், நானொரு பதார்த்தத்தை விரும்பியிருக்கிறேன் எனப் பெரும்பாலும் பொருள குறித்தும், சிறுபான்மை விடயங்களைக் குறித்தும் வழங்கி வருதல் காண்க. இனிப் பொருளகளையும், விடயங்களையும் பதமென வழங்குவது வடநூல் வழக்கன்றித் தமிழ் வழக்கன்று. என்னை? "எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற், பதமா மதுபகாப் பதம்பகு பதமென, விருபா லாகி யியலு மென்ப," பதவியல், பதவுரை, பதப்பொருள என்பவாகலிற் பதமென்ற துணையானே சொல்லென்றே பொருள்படுமாதலால் அதனை விலக்குதற் பொருட்டுப் பதார்த்தமென்றே வழங்கி வருவது தமிழ் வழக்கெனக் காண்க. இங்ஙனமன்றிப் பொருள்களையும் விடயங்களையும் பதமெனக் கூறின் அதுவே மரபு வழுவெனக் காண்க. இன்னும் இது கூடாதென விலக்யோர் காட்டிய நியாயநூல் விடயமென்றதே மிக்க சான்றுபிற்று; அவர் இதை யறநூலென்றே வெளிப்பட்டு நிற்றலின். என்னை? "சாற்று மநுபந்த சதுட்டய நூற்கு விடயம் சம்பந்தம் பயனதிகாரிகளென நான்கறியே" "விடயமது சிவ சீவர் தமதேகத்துவமாம்" என்பவாகலின் விடய

மென்பது நாற்பொருளை யாகலான், அறம்பொரு ளின்பமும் வீடுறு நிமித்தமுங், திறம்பெற வுரைத்த வித் திருவள்ளுவருமை, யுரையாவிடய மொன்றுளதெனிற் சான்றோர், புரைதீர் மொழியெலாம் பொய்படுமொன்றோ, விது தமிழ் வேதமென் றிட்டதெற் றெற்றே, பிழைத்தது மரபெனப் பேசலெற் றெற்றே, தழைத்திடும் மரபொடு தமிழ் மாண்டோரே.

இன்னும், "தேஷாமாத்ய ம்ருணாதாநம்" என்றெழுத்துப்பிழையாக வெழுதிக்காட்டிய மநுவசனத்திற் சொல்லப்பட்ட பதமென்பது, அதற்குரிய பெயரன்றென்பது தோன்ற விவகார விடயமென்றன்றோ வுரை செயப்பட்டிருக்கின்றது? பதமென்றதற்குப் பொருள் விடயமன்று; அது வலிந்து கோடலாய்ச் சொல்லப்பட்டதன்றி எந்த நிகண்டினுமில்லை. இன்னும் நாரதர், "ஆ்ருஹியோமஃ ஸ விஜ்ஞேயஃ ஸம்ஸாகதவாஹியோமதஃ" எனவும், "ஏஷாமேவ ப்ரபேதோந்ய ஸ்ஸதமஷ்டோத்தரம் பவேத்" எனவுங் கூறிய வசனங்களிலே விவகார மிரண்டுவகையாய்ப் பிரிக்கப்பட்டதென்றார், அதுதானே நூற்றெட்டு வகையாய்ப் பேதப்பட்டிருக்கின்றதென்றுஞ் சொல்லியிருக்கின்றது. இவ்வாறே மேற்சொல்லிய மநுவசனத்திற் குரைசெய்த விஞ்ஞானேசுவரரும் "வ்யாநஸ்வாஷ்டா ஊமயாஹிருதே" என்று பீடிகை போட்டுக்கொண்டு மறுத்தலென்னு மதம்பற்றி விவகாரம் பதினெட்டு வகையாய்ப் பேதப்பட்டிருக்கின்றதென்றார்; பதமென்றெடுக்கவேயில்லை. இப்படியிருக்கின்ற வடநூல் வழக்கையுந் தமிழ் வழக்கையு நோக்கி யுரைசெயப்புகுந்த பரிமேலழகர் இவ்விரண்டினுக்கும் பொருந்தப் பதார்த்தமென்றுரைத்த துணராது மிதந்த கருத்தானே யது கூடாது, என்

றின் பெயரை யொன்றிற் கிட்டு வழங்குவது மரபுவழு வென்றனர். அங்ஙன மரபு வழுவென்றோ மதுவுடனே தான் சொல்லவேண்டிற்று; மது விவகார விடயத்துக்குப் பதமென்று பெயரிட்டாரென்றும், அதுவே பிறநூலிலே வழங்கிற்றென்றும், ஆராயாதுரைத்தமையின். என்னை? நியாய சாத்திரத்திற் கௌதம சூத்திரத்திலே, சத்தம் பதமென்று சொல்லுக்குப் பெயரிட்டிருக்கின்றது. வியாகரணத்திலே, சுப்திஙந்தம பதமென்று மிருக்கின்றது. வேதாந்த சாத்திரத்திலே சத்துவ முதலிய மூன்றிற்கு மிடப்பட்ட குணமென்பதை நியாய சாத்திரத்திலே உருவ முதலிய விருபத்து நான்கிற்கு மிட்டிருக்கின்றது. ஷை-ல் ஆகாமிய முதலிய மூன்றிற்கு மிடப்பட்ட கருமமென்பதை எடுத்தல் முதலிய வைந்து கிரியைகளுக்கு மிடப்பட்டன; ஆனதிலே திரவியம் குணம் முதலிய வேழுக்கு மிடப்பட்ட பதார்த்தமென்பதை, விவகார விடயத்துக்கிடக்கூடாதென்பது அவர் மரபு நோக்கி யன்றி மற்றெம்மரபு நோக்கியும் வழுவாகாதென வுய்த்துணர்க.

உரைப்பாயிரத்துள், "நின்றவவ்வவற்றிற் கெனல்வேண்டும் நின்ற வற்றிற்கென்பது கூடாது" என்றதுக் கண்டனம்.

௩. அந்தணர் முதலிய வருணத்தார்தாம், பிரம சரிய முதலிய நிலைகளி, னின்றெனப் பயனிலை கொண்டதோர் தொடர்பி, னிடைத்தரத் தமக்கு விதிக்கப் பட்டவென்றிடைப்பிற வரலுமைழத் ததுமக்கென்ற, வடுகினிற் பயனுடைத் தவர்பல ராதலிற், பிரம சரிய முதலிய நாலவகை, நிலைகளி னின்றவ வற்றிற் கோதிய, வெனப்பன்மைச் சுட்டுக்கேற் றுவா கொல்லோ, வரிமே லழகுறூஉ மன்பமை யந்தணர், பரிமே லழகர்தாம் பழிப்பரி மேற்கொள்வோ, ரன்றியஃ தென்னெனி னறைதரு நால்வகை, நிலைகளி னின்றெனக் கொண்ட

பின் படுக்கிர், சுட்டியர் வேண்டி னஃதாற் செய்ரோ, சுட்டாது பன்மைச் சுட்டடுக்கி வரலா, லாதலி னவற்றாற் கோதிய வென்னை, வடுக்காது சுட்டலே யடுக்குமென் றுரைக.

உரைப்பாயிரத்துள், “பயந்தவாயேனல் வேண்டும் பயந்த
வென்பது கூடாது’ எனற்குக் கண்டனம்.

௪. வழக்குந் தண்டமும், பயந்தவெனவே பயனிலை முற்றிற், றதுகமன்று முடிந்தது முடிந்தது, வாயது உம் பன்மை யாக வேண்டுநர்க், கல்லதூஉம் பன்மை யல்லதூஉம் பன்மை, அதான்று, ஆயதென்றது பழித்தாயெனக்கொண்டது, தாய வட்டாலுமென் செய்யுளைத்தோமெனுக, கொண்டதுபோலு மென் வண்டமிழ்ப் புலவீர்.

கடவுள்வாழ்த்து ஒன்பதாவது குறளுரையில், “இனி இந்த நான்கு
முடையறேயெனல் வேண்டும், உடைத்தாயெனல்
கூடாது” எனற்குக் கண்டனம்.

௫. இனி, எண் குணங்களாவன:—இறைவன் இந்த நான்கு முடைத்தாயிருப்பதும், இந்த நான்கு மில்லாதிருப்பதும் எனவும், அட்டசித்திகளெனவுஞ் சொல்வாரு முண்டு, என்றதோர் தொடர்பிடை யெழுவாய் பயனிலை, யிஃதென வுணர்ந்தில ரிஃதெனே மொழிந்தனர்.

அதனுளாறவது குறளுரையில், “இச்சைகளுமைந்தாயினவெனல்
வேண்டும் இச்சைகளுமைந்தாயிற்றெனல்
கூடாது” எனற்குக் கண்டனம்.

௬. “ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையு, மோரிடம் பிறவிடந் தழுவலுமுளவே” என்னு மிலக்கண முணராதார் “இருநோக் கிவளுண்க ணுள்ளது” என்பதனையும், “உள்ளிய தெல்லாம்” என்பதனையும், “தந்தை செழி

யா" என்பதனையும், "இளையர்தாய்" என்பதனையும், ஔவை கூறிய "இளநெருங்கு" என்பதனை "வளர் நெருங்கு" எனவும், "சிலத்தைப்பேணின்" என்பதனை "சிவத்தைப்பேணின்" எனவுந் திருத்தியதுபோலத் திருத்தல்வேண்டுமென் றுரைத்தவரன்றியும், பால்வழுவமைதியும் பால்வழு விவர்க்கே.

உரைப்பாயிரத்துள், "கடவுள்வாழ்த்துக் கூறுகின்றரெனல் வேண்டும், முதற்கடவுள் வாழ்த்துக் கூறுகின்றரெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

௭. இனி, முதற் கடவுள் வாழ்த்துங் கூறுகின்றார். கடவுள் வாழ்த்தாவது எனப்புழி முதனனி நின்றதை, முன்னென்ன வுணரார்க் கென்னினியுரைப்பாம், அவர் குன்றக் கூறலென் றாக்கி னென்செய்வாம்!

உரைப்பாயிரத்துள், "சாத்துவிகமெனல் வேண்டும் சாத்துவிதமெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

௮. நிலையினிழிந்ததோர் நீர்மையர் தம்முறைமை, புலவின் முன்னீர்மை யாய்ந்துணர்தஞ் சீர்போற, சாத்துவிதமெனுந் தமிழ்மொழி தன்னுமைமரச, சாத்துவிகமெனச் சாற்றுமயன் மொழிபிய, விலையென்றுய்த்தல் சொல்லியாங்காற்றுமே. என்னை? கிருஷ்ணன்-கண்ணன், காவியம் - காப்பியம், பர்வதம் - பருப்பதம், மரதகம்-மரகதம், கோகநதம்-கோகநகம், சாத்துவிகம் - சாத்துவிதம், சாத்திகம், மசானம் - மயானம் எனப் பல்லாற்றானுந் திரிந்துஞ் சிதைந்துஞ் சான்றோரிலக்கியங்களுட் பயின்று வருவன நோக்கி, ஆசிரியர் தொல்காப்பியனார் "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்தசொல்லாகுமே" எனவும், "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" எனவு மிலக்கணங் கூறுதல் காண்க. இனி

பர் சாத்துவித மென்பது கூடாதெனற் குதாரணமாகக்

காட்டிய வேதாந்த சூளாமணியில், "சத்துவகுணத்திற் றோன்றும்" என்ற பதினெட்டாவது செய்யுளின் பின்னின்ற நாற்பதாவது செய்யுளில், "அருந்தூல சரீரத்திற் சாத்துவிதகுணத்தோடு" என்றிருக்கின்றது; அதனைப்பயிலார் நுண்மாணுழைபுல நுழைந் தின்று கொல்லோ வென வுலகங் கூறுதற்கு உட்கிலர்க்கு, முக்குணத்தின் பெயர் "முக்குணஞ் சாத்துவித மிராசதந் தாமதம், சாத்துவிதகுணந் தொழிலின்பெயர்" என்கின்ற திவாகரப் பயிற்சியும், "ஏற்ற சாத்துவிதகதோடே யிராசததாமதங்கள்" என்கின்ற நிகண்டுப் பயிற்சியும் இல்லாயி னென்செய்வ ரிவர்தாம புணர்த்துரி, னிலைபிறநடைப் புவிக்'கலாகூர் வழுஉச்சொல், லன்றி யாண்டைய வாமிலக்கணச்சொல், லொன்றிய சான்றோ ருரைத்த நூலவ்வே.

அரனுமர், "கடவுளெனல் வேண்டும், கடவுளெனல் கூடாது" என்பதற்குக் கண்டனம்.

கூ. விளம்பிய கடவுளை மூவரும் விசேடித்து, வளம்பெற நின்றுழி மயலறக்கேண்மின், மெய்மைத்த சிர்மையவ் விரிஞ்சனை நேர்தரூஉந, தெய்வப்புலமைத் திருவள்ளுவனு, ரோதியகுறட் குரையியான்பதிற் சிறந்திடக், கருத்துப பதப பொருள் காட்டு விசைவிடை, பொருத்தி யைந்திய லுடன் பொருள விரித்துரைபபத், தொடங்கிய நூலினு மடங்கலில் புலவர்தா, யம்மூவரையு மென் றியாங்கனஞ் சுட்டுவர், மும்மாண்பிலாது முற்றுப்மையும் விதந்தே, அதான்று, உறுதிப் பொருட் குரை புணராமையினுன், முதற்கடவுளரோர் மூவரென் றுணர்ந்தில,ர றமபொருளின்பமு மாதன்முக்குணந்தா, னாதலின் முப்பொருள் கூறலுற்றார்க்கும், மூவரைவாழ்த்துதன் முறைமையில் வாழ்த்தம்,மூவர்க்கும் பொதுப்படக் கூறினரென்றன, ராக்கவினைக்கு வினைமுதல் வேண்டுமென், றேககற்ற கென்செய்து மூலபபகுதியே,வீடுமுன் விலக்கினர்

விதியுழியரனென், முதலெழுத் தெனல் போல் முதற்கடவு ளரே, யிதுகருத தின்றி யியன்ற பிழையெனற், குருட்டங் குருவரன் மொழிந்ததமை யன்றியு, முனைவினூதியம் பெறூஉ முதவி கோறலினே.

அதனுள், "முத்தியெனல் வேண்டும், மோக்கமென்பது கூடாது" எனற்குக் கண்டனம்.

கo. நீடுபிறைந்து மோக்கமென்பது, பிறசேர் நிகண் டெனும் பொற்றியோர்ந் தனரெனின், மோக்கமென் பது நிலை முனிவரோ முனியார்.

அதனுள், "உறுதி நன்மை யன்று" எனற்குக் கண்டனம்.

கக. உறுதியென்பதற் குறுபொரு ளன்மையிற், பிறிது பொருளுளவெனப் பேசலுற்றவர்க்குக், கல்விகொல் வலி கொல் கண்மயக்கிற்றுங், கொழுக்கம்போன் மக்களுயிர்க் குறுதி பயப்பதொன், றிழுக்கவிலையெனி னிதற்குவலியெ வன், கல்வியென் றோதுதல் கண்சாய்ந்தோதினூஉ, மவற்றிற் குமுடிவினி னஃதேதுவாயலால், வேறிலை யாதலிற் கூறாதடுறே ற்றும். இன்னும், "உறுதியே கடவுளொண்மையுத்தம மற்று நன்றும்" என்பது நிகண்டாதலானுந் தெளிக.

இது "பதவுரையின் பின் றொகுத்துச் சொல்லப்பட்டவை யெல்லாம் விரித்துச் சொன்றலன்றி யொரோவழி விரித்துரைத்து விரிவுரையெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

கஉ. "விரிவதிகாரத் துணிவுபயனே, டாசிரியவசன மென் றீரேழுரையே" என்பதற்கிளமையி னெத்துணையுமுந் துழந், துணர்த்தியதன்றியு மெழுத்தினும் விரித்தா, மழுக்

காலெனக்கோலோ டாதாறுசென்கோலே, வெள்ளாங்கிளிக் தில ரென்பதொர் மற்பல, மற்றவையா வாயினா மொரா நின்ற வற்றை, மேவன்பிழி விரிகடப்பரைத் திடல் விரிவுநரமே.

இது "பரிமேலழகர் தாமியற்றிய நூலியே
சில வேறுபாடு செய்தலிலக்கணமாகிய புதிதெனல்
கூடாது" எனத்தெரிக்கின்றாம்.

கக. "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி, யழியாமரபினது வழிநூலாகும்" "இருவர் சாத்திரத் திருவை தொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும்" "முன்னோர்மொழி பொருளே யன்றியவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவமென்பதற்கு-முன்னோரின், வேறுநூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்குங், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" என்கின்ற நான்மரபுணரார்க் கியாதென்னோ மென்னும்? தொல்காப்பியம்: "குறியதன்முன்ன ராய்தப் புள்ளி, யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே." நன்னூல்: "குறி... மிசைத்தே." இலக்கண விளக்கம்: "குறி...மிசைத்தே." தொல்காப்பியம் "ஔகார விறுவாய்ப் பன்னீரெழுத்து முயி ரென மொழிப." நன்னூல்: "அம்முதலீராறுவி." இலக்கண விளக்கம்: "அகரமுதலீராறுமுயிர்." குறள்: "ஐயுணர்வெய் தியக்கண்ணும் பயமின்றே, மெய்யுணர்வில்லாதவர்க்கு" சசி வர்ணபோதம்: "ஐயறிவறிந்ததனை யடங்கினவரேனு - மெய் யறிவிலாதவர்கள் விடதமொருமே" எனா, முழுவதூஉ மொத்துச் சிறிது வேறுபடச்செய்வதூஉஞ் சிறிதொத்து முழுவதூஉம் வேறுபடச் செய்வதூஉந், தொன்னெறிமரபெனத் துணிந்தனர்கோட, னன்னெறிப்புலவர் கண்ணின்றனரவ்வே.

உரையாசிரியர்களுள், "இந்திரன் முதலிய இறையவரெனத்
தேவேந்திரன் முதலிய கடவுளரெனல் கூடாது" எனற்குக்
கண்டனம்.

கச. இந்திரன்முதலிய கடவுளரென்றது, இந்திரன் முத லிய வானவரென்றே ராவியலவை முழுவுணர்த்திலர் பல்வழுவுமாய், இந்திரன தேவரென்றேனு முணர்த்திலர், முறைசெய்பாகய பன்னவ்வமயக்கட், கிறையென்று கைக்கப்படுமென முடிந்து, மிறையோருமென்று மெனச் சொலற்பாலர்?

அதனுள். "இந்திரன்போலத் தேவர்கள் பலர்
மேலோர் பதவிகளை யாள்கின்றோரெனல்
கூடாது" எனற்குக் கண்டனம்.

கரு. இந்திரன்போன்றே கடவுளர் பலருமாங், கோரோர் பதங்களை யொளிபெறவாண்டன, ரருமறைநூல் பலவகைத் திட னுணரார், காசிகாண்டமுங் கண்டார்கண்டிலர், வேதாக மங்கட்கு விளம்புவர் முரணே.

அதனுள், "புத்தி கூர்மை யென்பது
சந்தி வழு" எனற்குக் கண்டனம்.

கசு. வயிரகடகமுந் தனதடமென்பது, முணரார்க்கென் புத்தி கூர்மையினொருரை.

அதனுள், "கற்பென்பதற்குச் சலியாத
வன்பெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

கள. சற்பெனப்படுவது சொற்றிறம்பாமை, யதன் காரணமனத் தசைவிலாவன்பு, காரணங்காரியங் காரியங் காரணமாக வுரைத்திட லரியநூல் வழக்கே.

ஆனால், "கவியென்பார்ந்த வித்துவானெனக் கூடாது" எனற்குக் கண்டனம்.

கஅ. "புலவர் பாடிநோகந்தர் புநருபார் கவிகளன்றோ ளர்" எனவுரு ரிதன்ற நனியுமாராய்து, வித்துவான்கவியிடை விசாரமற்றென்னோ, நாலெரயாப பிரசித்த வித்துவானதளிற், நாலவழுக்குணர்வரென் பேறுவிட்டதென்னே!

ஆனால், "வித்துவானொருவன் வணங்குங் கடவுளை யெனல்வேண்டும், வணங்கப்பட்ட கடவுளையெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

ககூ. இவர், பேய்பிடிக்கப்பட்டாரெனிறுங்கே, பெயூ வாய்ப்பாடாயணிலையாகிய விளைக்குறை, பெயராகத்தைக்கொண்டதென் றெங்ஙனமுணருமா, றுளதெனின் வித்துவானானவன் வணங்க, வத்தொழிற்பட்ட கடவுளென்றுணர்வார்.

க-ம் அதிகாரம், உ-ம் தறளுரையில், "என்னெனக் கண்ணழித்தல் கூடாது" எனற்குக் கண்டனம்.

உ௦. என்னெவன் வினைவினைச் சொல்லென் றுணரார்க், கென்னிடைச்சொல் வழக்கிடற்குள நீர்மை.

க-ம் அதிகாரம், அ-ம் தறளுரையில், "மூலத்திலுருவக மில்லை" எனற்குக் கண்டனம்.

உக. நீந்தலரிதென் றதனிறைவ, னடிக்குருவகமைத் கதுமூலத்தே (அது தோன்றுமையாற் றேன்றுதற் பொருட்டு அப்புணையைச் சேராதார் கரைகாணுதவற்றுள் ளே யாழ்ந்துவாராதலி னீந்தலரி தென்றுரைத்தனர்) என வெடுத்தெழுதியு முணராருணர்தா, வணித்தாக விஃதேக தேசவுருவக, மென்றுங் காட்டினரினிக காணுர்க்குக், காட்டு

வான் முன்காணுமென வெழுதியும், பிறவாழி யறவாழி யந்தணான் முனைபுகோள, யெனவொருநீந்தலை வினையுருவகமைப, புரைதீர கேள்வி புலமையினோரா, மூவைகாரணி யியலோர்ந்தில ரெனவேயா.

க-அதிகாரம்-க-ம், சூறணுரையில்
“அரசம் ஒலிவிகார மன்று” எனற்கு கண்டனம்.

உஉ. அனுப்பிர ஞாத பதன் காரியமொலி, யெடுத் தென வுணவளித் தியபபினமிலக்கண, புணர்ச்சிலர்சென்னை வாயுலவு பாஞைகரு, பீங்கிதுகாறுந நீங்குறு தொழிலி னென், னெழுத்திற்குக்காரண மெனவுணாரரேனு, மாடைக காடைவிகாரங் காரணமெயென, மதுககளி யாக்தரின் விறுப்புற மொழிந்தனர்.

உரைப்பாயிரத்துள் “நியமித்த தென்று சொல்லுமை கூடாது” எனற்குக் கண்டனம்.

உந. “ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும், வருவன தாமே வழுக்கென மொழிப” எனவும், “ஒருமொழி யொழி தன் னினங்கொளற் குரித்தே” எனவுங் கூறுத லிலக்கண மாதலால், ஈவதுவிலக்கே லெனினியைவுர், விலக்கியதன்றெ னின் விடநகர்ந்தனமே, சாவமெனனிமேனை நாற்பாற்பொரு ள்களு, முய்வதுன்மெடனின் மெய்பெறவுமார்ந்து, நியமித்த தென்பதி னியமித்தனவு, மடங்காதென்பது திடங்காண் வெளிப்படை.

அதனுள், “தமக்கெனல் கூடாது,
தத்தமக்கெனல் வேண்டும்” என்பதற்குக் கண்டனம்.

உச. தமக்கு விதித்தவெனு நேர்ச்சிக்குத், தத்தமக் கென்பதுஉடன் தழூவாதாயி, னெப்பொருளெச்சொலி னெவ்

வா றென்பதற், கோர்பொருளோர்சொலி னோரறென்றே பொருள்படுமாறதூஉ மிருள கெடவுணர்க.

அதனுள், "வழுவாதேனற்குக் குற்றமில்லாம லேனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

உரு. வழுவாதெனு மெதிர்மறை வினைக்குறைக்குக், குற்ற மில்லாமலென் குறிப்பெதிர்மறைபொரு ளாவ்வாதெனிற் சோறுண்டாயென்குறைக், கின்றியென்குறிப்பெதிர் மறை யென்காட்டுவ, ரெச்சினார்க்கிவறிய வினையனையவர், நச்சி னார்க்கினியர்தொல்காப்பிய னார்புகல், பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியு, மெதிர்மறுத்து மொழியினும் பொரு ணிலைதிரியா, வென்றதிலிஃதியன் மன்ற திலலம்ம.

அதனுள், "நெறியிலேயுயிர்களை நிலைநிறுத்துத லென்பது கூடாது" எனற்குக் கண்டனம்.

உசு. இருவகைநெறியினும் வழீஇயினோரை, யந்நெறி நிறுத்தற் பொருட்டென வடிக்கடி, சுட்டிக்காட்டியுந் துணி வுளத்துறூஉது, பால்கோடியற்கையர்•பால்கோடியற்கையிற், றெரிபிறுமாக்குநர் செய்கையிற் கைதுழாய், வான்மதிகோ டெனு மகாரினுமடமைகூர், வான்மதி கோடென வழங்கு மந்நெறியினை, யெடுத்துநிறுத்தற் கெனவுடன்பட்டமை, யடுத்தெவருடன்சொலி யாற்றற்பாலாம்.

அதனுள், "சொல்லியவெனல் கூடாது" எனற்குக் கண்டனம்.

உஎ. சொல்லியநெறியி னின்றெனல் வழாநிலை, பல்லிய னூன்மறை பகர்ந்தே கிடத்தலின். ஆசிரியர் தொல்காப்பிய

ஞர், "இறப்பே யெதிர்வே யாயிருகாலமுஞ், சிறப்பத்தோன்று மயங்குமொழிக்கிளவி" எனவும், "ஏனைக்காலமுமயங்குதல்வரையார்" எனவுங் கூறிய விலக்கணங்களை யையந்திரிபற வாய்ந்துணர்ந்தோராதலிற், சொல்கின்றநெறிக்கணின்றெனச்சொற்றன, ரதுவமுவமைதியன்றெனினதுவமுவமூஉ எனக்காண்க.

அதனுள், "என்னத்திறலெனல் வேண்டும் என்னவெனல் கூடாது" எனற்றக் கண்டனம்.

உஅ. ஆகும் என்பதை, ஆம் எனல் கூடாது, ஆமத்திறலெனிற் பொருத்தமென்பதோர் புலமையினீங்கே, யென்னவெனல் கூடா தென்னத்திறலென, வியல்வழுவின்னிலையென்பருறுதவ, வியல்வழுவின்னிலை யினராதலினால். என்னெனின், ஆசிரியர் தொல்காப்பியனார், "அத்திணைமருங்கினிருபாற்கிளவிக்கு, மொக்குமென்ப வெவனென் வினவே" எனக் கூறிய வெவனென்னும் வினவினைச்சொல் இக்காலத்து என்னெனவும், என்னை யெனவும் என்னவெனவும் மரீஇயிற்றுதலால், என்னவென்று கேட்பீராறலென்னும் பொருள் பட என்னவென்றால் என நின்றதெனக் கண்டுணர்க.

க-ம் அதிகாரம் க-ம் தறளுரையில் "அகாரமாகிய முதலைக் கோண்டிருக்குமெனல் கூடாது" எனற்றக் கண்டனம்.

உகூ. அகரமுதலவென் றறைதருமஃறிணைப், படர்க்கைப்பன்மைவினைக் குறிப்பினுக்குரை, யகரமாகிய முதலை

யுடையவென், றுரைத்ததுணரார்களு முணர்தரற் பொரு ட்டெனன், ககரமாகிய முதலைக்கொண்டிருக்கும், மென்றியல் வழுவோ டிசைக்கும்பொருள்வழூஉ, வாராசீர்மையி னராய்ந் துரைத்தமை, யோராரென்கட னுடையவுடைத்திக்கு,வெளி ப்படையெனக்கொடு களிப்படைந்தனரால்.

அதனுள், "அகரத்திற்குத் தலைமையொலி விகாரத்தின்று" என்றுக் கண்டனம்.

௩0. அகரக்குத்தலைமையவ் வொலிவிகாரத்தினு, மின் றெனி னன்றுநன் றிசைப்பது கேண்மின், குறைபுநக்கியயர் நடத் தினன்கூத் துணர்வரியா, ரிறைபுநகியயர்படத் தின னன்றியென்றுத், தேவரோ முனிவருந தெருண்டன ரியோ கிய, ரியாவருந் துதிசெய வமைந்தன ரதாஅன்று, தங்கத் தா ரணி தமிழ்வளர்த் திருமூன், றங்கத்தார்பீனவன் சங்கத்தார், பலகைதாழ்ந்திரப்பப் பரிநறுதன்செய்கையே, மேற்படக் குறட்பா வியனமிழ்தளித்துக், கடவுளர் துதித்தொண் கவி மணிமாலை, சூட்டபெற்றனர் தொல்லுலகதாஅன்று,பன்ன ரும் பெருமபுகழ் பரப்பினர் திசைதிசை, யின்னர்தா மெழுத் தெலா மகரமுதலவென், றெவ்வாறுரைட்பர் மற்றெவ்வா தாதலா, லொலிவிகாரத்தினு னுதித்தன வெழுத்தெலா, மவ் வொலி முயற்சிகான் கண்ணாநாப பல்லிதழ், வவ்வியவவற் றுழைமன்னு மூவகை, முயற்சிக்கு மங்கா முயற்சிகாரணமா, மதனுற்பிறப்ப தொன் றுகலானு, மேலைய வேலைமுயற்சியிற் பிறபபினு, மங்காத்தல் வேண்டிற்றுதலானுமவ், வொலி விகா ரத்தெழுத் தொன்றெழி நானும், றினுமிது சிறத்தலி னியன்

முறைநிறுப்போர், "சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண்டம் முதல, னடத்தருமே முறையாகும்மே" எனக் கூறி முன்ன ரகரத்தைவைத்து முறைசெயலால், எழுத்தெல்லா மகர முதல வெனல்பொருந்திற்று எனக்காண்க. நாதமாத்திரை யகார வடிவிற், றுதலி னிரண்டிடத் தமைந்தது தலைமை, விரவியுந் தனித்து மெனவரு மிரண்டிடம், (இனி) இறைவன் விராட் டு னிரணியகருப்ப, னந்தரியாமி கூடத்தரென் விகாரியா, யெல்லாவுலகிற்கும் வல்லகாரணனாய், முயற்சிவகையின் முன் னின்றவை முழுவதூஉ, முணர்தலானும் புணர்விகாரமாஞ், சுபாவசை தநிய மாத்திரமா யபாவமாய், நனிதுன்று பிரம மெனத் தனிநின்றுலகெலாங், காட்சியின் வைகுறூஉ மாட்சி யானு, மடுத்துக் காட்டிய வகரமிறைவற், கெடுத்துக் காட் டணி யெனலுமுய்த் துணர்மின். இங்ஙனமுணராது கூறிய விவரணையர் பலருங்குழீஇ யித்திருவள்ளுவர் நூற்கும்பரிமே லழகருரைக்குங் குற்றம்வாராமற் காக்கக் கடவோமென்ற சொல்லுள்ளே மறைந்து நின்றவற்றை முழுவதூஉங் கெடுப் பவ ரிவரென்றே கோடுமொரு தலையாவே. என்னெனின், விகாரத்தானன்றி நாதமாத்திரை யானவியல்பாற் பிறத்தலான் அகரத்திற்குத் தலைமையு மென்ற தொடர்பி னிவர்கட்குப் பட்டபொருள் விகாரத்தில்லை யியல்பாற்றலைமை யுண்டென் றன்றே. அங்ஙனமாயின தற்கியைய விவரச்சிறப்பதிப்பிக்கத் தொடங்குங்கால அக்குறளுக்கும் பரிமேலழக ருரைக்குமாறு கவே பதிப்பிப்ப ரென்.பதற்கையமின்றே; மேற்றொட்டு மிவ் வாறே சான்றோர் நூல்களையெல்லாங் கெடுத்தமையான். இனி இவர் கருத்தின்படி யிருத்தல்வேண்டிற்றேல், நாதமாத்திரை

யாணவியல்பாற் பிறத்தலின் அகரத்திற்குத் தலைமையும் அது போ லியற்கையுணர்வான் முற்றுமுணர்தலின் ஆதிபகவற்குத் தலைமையுங் காண்க என்றன்றுகொல்லோ விருத்தல்வேண்டிற்று. மண்ணானன்றி நூலானியல்வதுபடம் நூலானன்றி மண்ணானியல்வதுகட மென வேதுவாகாததனை விதந்தெடுத்து மறுத்தலிற் பிறிதோர் பயனுமின்றாம்; அதுபோல விகாரத்தானன்றி யென்பதூஉஞ், செயற்கை யுணர்வானன்றி யென்பதூஉம், வாளாகூறலாய் நின்றுபயனின்மை, யென்றதோர் குற்ற நூற்கிவரா னெய்துறாஉ, நன்றாய்ந்து நிலீஇயர் நன்னெறி, பொன்றாக் கதியுடன் புகழ்பெறற் பொருட்டே.

முற்றிற்று.

இனிச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினேற்குப் பல் வாழ்வாட்·' சில்பிணிப் பேரறிவினோர் கூறிய விலக்கண விலக்கிய நூல்கண் முழுவதூஉ முணர்ந்துணர்த்தி யச்சிற் பதிப்பித்தற்கேலாதென் றிதுகாறும் வாளாவதிந்தவிரதத் தை யித்திருவள்ளுவர் நூலும் பரிமேலழகருரையும் வலிந்து பற்றிச் சிதைத்ததனைக் குரவனைப்புகழ்ந்து, தன்னிகரில்லாத் தலைவனைத் தாழ்ந்தாங், கென்னி னியன்றவாற் றினி துணர்ந் துணர்த்தித், தொடங்கின னச்சிற் பதிப்பித்தற், கிடங்கெழு சென்னை யியல்வயினோரே.

பூமிசுந்தரமின்றியமையாச்
சோமசுந்தர குருதுணை யெனக்கே.

Ripon Press.

ஸ்ரீராமவ[illegible] புஸ்தகசாலை,

தம்புசெட்டி வீதி, சென்னை.

திருவாசகம் —(புதிய பதிப்பு) மாணிக்கவாசக சுவாமிகள் ஆப்டோன படத்துடன் இப்பதிப்பில் செய்யுள்களை மூலத்தை வாசிக்கும்போதே கூடியமட்டும் பொருள் விளங்கும்படி சந்தங் கெடாத வண்ணம் சந்தி பிரிக்கப்பெற்று, பைகா (பெரிய) எழுத்தில் நூதனமாய் அச்சிடப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரமும் காலவரையறையுடன் நூதனமாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. உயர்ந்த கிலிட்டு பயிண்டு 1 0 0

திருவெங்கைக்கோவை —(சிவப்பிரகாச சுவாமிகளருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விசேஷவுரைகளுடன்) உயர்ந்த கிலிட்டு பயிண்டு 2 8 0

நைடதம் மூலமும் உரையும் —(புதிய பதிப்பு) இதில் அன்னமும் தமயந்தியும் அமைந்த உயர்ந்த ஆப்டோன வர்ணப்படமும் 27-வித்தியாச படங்களும் அடங்கியுள்ளன. உயர்ந்த கிலிட்டு பயிண்டு ... 2 0 0

ஸ்ரீ விவேகாநந்த விஜயம் —விவேகாநந்த சுவாமிகள் திவ்விய சரித்திரமும் அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] காலிகோ பயிண்டு உயர்ந்த கிலிட்டுடன் 1 4 0

ஸ்ரீ சங்கர விஜயம்.—ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம். (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது) காலிகோ பயிண்டு உயர்ந்த கிலிட்டுடன் 1 0 0

ஸ்ரீ திலகர் விசாரணை, அல்லது 2-வது கேசரி இராஜ நிந்தனைக் கேஸ்: ஸ்ரீ பாலகங்காதர திலகர்மீது பம்பாய்க் கவர்ன்மெண்டாரால் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட இராஜ நிந்தனைக் கேசில் நடந்த சகல நடவடிக்கைகளும் ஆதியோடந்தமாய்த் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: திலகர் சரித்திரமும், உருவப்படமும் கூடியது 0 12 0